அசல் வழக்கு எண். 186/2018 வா.சா.1. சுரேஷ் த/பெ பெருமாள்

12.12.2022 குறுக்கு விசாரணை தொடர்ச்சி......

1. 1ம் பிரதிவாதியான என் அப்பா பெருமாள் மற்ற பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய தேதி எனக்கு நினைவில்லை. தறி வேலைசம்மந்தமான தடை, மடி, சபரி பற்றி எனக்கு தெரியுமா என்றால் பட்டு தறி சம்மந்தப்பட்டது நான் பாலியஸ்டர் தறி வேலை செய்து வருகிறேன்.

2. என் அப்பா எனக்கு மேடோவர் செய்து தரும்போது அவரது பங்கு கடனை கழித்துவிட்டு தான் மேடோவர் செய்தாரா என்றால் அவ்வாறு இல்லை. மொத்தமாகதான் மேடோவர் செய்துக் கொடுத்தார். என்அப்பாவிடம் நான் மேடோவர் பெறும்போது அதற்குரிய பணத்தை நான் வங்கியிலிருந்து எடுத்து வந்து கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சேர்த்து வைத்திருந்த பணத்திலிருந்து தான் கொடுத்தேன். நான் என் அப்பாவிடம் பணத்தை கொடுத்து மேடோவர் பெற்றது என் அம்மாவிற்கு மட்டும்தான்தெரியும் என் வீட்டில் வைத்து தான் என் அப்பாவிடம் பணத்தை கொடுத்தேன்.

3. என் அப்பாவிற்கு கடன் இருந்ததால் எனக்கு மேடோவர் செய்துக் கொடுத்தார். எனக்கு கடன் எதுவும் இல்லை. என் அப்பாவிடம் மேடோவர் பெறும்போது நான் கொடுத்த பணம் எனக்கு எவ்வாறு வந்தது என்பது குறித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. என் அப்பா எனக்கு மேடோவர் செய்துக் கொடுக்கும்போது அது பற்றிய தகவலை என்னுடைய சித்தப்பாக்களுக்கு அறிவிப்பு மூலம் தெரியப்படுத்தினாரா என்றால் இல்லை. அவ்வாறு நான் மேடோவர் பெற்ற விவரத்தை என்அப்பா தவிர்த்து மற்ற பிரதிவாதிகளுக்கு சட்ட அறிவிப்பு மூலம் தகவல் தெரிவித்தேனா என்றால் இல்லை. பண பிரச்சினை வந்த சமயத்தில் தான் தெரிவித்தேன். நான் பணத்தை பைசல் செய்ய வேண்டுமென்பதற்காகதான் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் ஆமாம். நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய தேதி எனக்கு தெரியவில்லை. நான் பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு நினைவில்லை.

5. இந்த வழக்கில் பாக உரிமை உள்ள முனியம்மாள் என்பவரை தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன். எனக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் இதுவரை இல்லை. நான் மேடோவர் பெற்றுள்ளதால் என் அப்பாவும் தனது பங்கு பணத்தை எனக்கு கொடுக்க வேண்டுமா என்றால் கொடுக்க வேண்டும். இது சம்மந்தமாக என் அப்பாவிற்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி உள்ளேன்.

6. வழக்கு அடமானச் சொத்தில் பாபுவின் பங்கு குறித்து வழிகாட்டுதல் மதிப்பீடு எதுவும் பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அடமானச் சொத்து சர்வே நெம்பர் எனக்குத் தெரியாது. பாபுவின் மாதிரி கையெழுத்துக்கள் எதுவும் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

7. நான் மேடோவர் பெற்ற பத்திரங்கள் எத்தனை என்றும் அதன் மதிப்பு என்ன என்றும் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. நான் பெற்ற மேடோவரை பதிவு செய்துள்ளேன். பதிவு செய்த சமயத்தில் நானும் என் அப்பாவும் கையெழுத்து செய்துள்ளோம்.

8. பாபுதான் அடமானம் போட்டார் என்பது குறித்து புகைப்படம் அல்லது வீடியோ ஆதாரம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.பாபு இறந்த சமயத்தில் நான் மேடோவர் குறித்து பிரச்சினை எதுவும் எழுப்பினேனா என்றால் பாபு இறந்தபிறகு தான் நான் மேடோவர் பெற்றேன்.

அப்படியானால் பாபு இறந்தபோது என் அப்பா அடமானம் குறித்து பிரச்சினை எதுவும் எழுப்பினாரா என்றால் இல்லை.

9. பாபு உயிருடன் இருந்த சமயத்தில் என் அப்பாவிற்கும், பாபுவிற்கும் 2000ம் வருடத்திலிருந்தே பேச்சுவார்த்தை அற்று விட்டது என்பது எனக்கு தெரியுமா என்றால் அப்படி எதுவும் நடக்கவில்லை.

10. 2ம் பிரதிவாதி முனியாண்டி மற்றும் முனியம்மாளை நான் தாக்கியதாக அவர்கள் ஆரணி நகர காவல் நிலையத்தில் என் மீது புகார் கொடுத்துள்ளார்களா என்றால் உண்மைதான். ஆனால் அவர்கள் 10 நபர்களுடன் வந்து என்னை தாக்கியது குறித்து நானும் காவல் துணை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்துள்ளேன். அவ்வாறு நான் காவல் துணை கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

11. 4ம் பிரதிவாதி சின்னப்பா வாழைபந்தலில் வசித்து வருகிறார். 4ம் பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் மேடோவர் பெறும் அளவிற்கு என்னிடம் போதிய பணம் இல்லை என்றும் நான் சொல்வதுபோல் என் அப்பாவிடம் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் பணம் பெற்ற பிறகு தான் என் அப்பா கையெழுத்து செய்தார்.

12. என் அப்பா கோராமில்லில் வேலை செய்து வந்தார் என்றும், அதனால் அடமானத்திற்கு பணம் கொடுக்கும் வசதி அவருக்கு இருந்ததில்லை என்றும், அதனால் பாபு எந்த காலத்திலும் என் அப்பாவிடம் அடமானத்திற்கு பணம் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. பாபு திருமணம் ஆகாதவர் என்றும் குழந்தைகுட்டிகள் இல்லை என்றும் அ தனால் அவருக்கு அடமானத்திற்கு கடன் வாங்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

13. பாபுவின் சொத்தை அபகரிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் தான் அவர் என் அப்பாவிடம் அடமானம் போட்டதாகவும் அதை நான் மேடேவர் பெற்றதாகவும் சொல்கிறேன் என்றால் சாயில்ல. பாபுவின் அக்கா முனியம்மாளை தரப்பினராக சேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும் தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல. என் சாட்சியம் பொய் சாட்சியம் என்பதால் செலவுத் தொகையுடன் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.